அவர்கள் தொழில் முனைவோர்கள் அனைவரையும் அழைத்து, “காலியிடம் இருக்கிறது; அரசினுடைய தொழிற்பேட்டைகளில் இடம் இருக்கிறது; அதை எடுத்துக்கொள்ளுங்கள்; கைத்தறித் துறைக்குச் சொந்தமான இடம் இருக்கிறது; தொழில் தொடங்குவதற்காக அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம்” என்று தெரிவித்தார்கள். ஆனாலும் எவரும் தொழில் தொடங்க முன்வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர், ஜவுளிப் பூங்கா அமைக்க வேண்டுமென்று தெரிவிக்கும் தொழில் முதலீட்டாளர்களை நீங்கள் அழைத்துப் பேசுங்கள். அவர்கள் ஜவுளிப் பூங்கா அமைப்பதற்கு முன்வருவார்கள் என்றால், மாண்புமிகு அம்மா அவர்கள் வழியில் செயல்படும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் தலைமையில் செயல்படும் அரசு எப்போது வேண்டுமானாலும் ஜவுளிப் பூங்கா அமைத்துக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. மனோன்மணி அவர்கள்.

திருமதி ப. மனோன்மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் முனைவோர்கள் முன்வருவார்கள் என்றால் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களின் ஆலோசனையின்படி, ஜவுளிப் பூங்கா அமைத்துத் கொடுப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 117, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. சத்யா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

117—

மரவள்ளிக் கிழங்கு ஆலை

***32398—திருமதி ப. சத்யா:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2018 ஜூன் 4

பண்ருட்டி தொகுதியில் மரவள்ளிக் கிழங்கைப் பயன்படுத்தி பல்வேறு உணவுப் பொருட்கள் தயாரிக்கும் ஆலை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பண்ருட்டி தொகுதியில், மரவள்ளிக் கிழங்கைப் பயன்படுத்தி உணவுப் பொருட்கள் தயாரிக்கும் ஆலை அமைத்திடும் திட்டங்கள் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. சத்யா அவர்கள்.*

திருமதி ப. சத்யா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னைத் தமிழ் பூமிகாத்த அருந்தவத்தால் அவதரித்து; அன்னைத் தமிழ் பூமிகாத்த அற்புதத் தலைவியின் நல்லாட்சியில், விவசாயிகள் அதிகமான அளவில் இருக்கின்ற பண்ருட்டி தொகுதியில் மரவள்ளிக் கிழங்கு ஆலை ஒன்றினை அமைத்துக் கொடுப்பது சம்பந்தமாக மீண்டும் மறுபரிசீலனை செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், பண்ருட்டி தொகுதியில் சுமார் 650 ஹெக்டேர் நிலத்தில் விவசாயிகளால் மரவள்ளிக் கிழங்கு சாகுபடி செய்யப்பட்டு வருகின்றது. அறுவடை செய்யப்பட்ட மரவள்ளிக் கிழங்குகள் உள்ளூர் மற்றும் வெளி மாவட்டங்களுக்கு சந்தைப்படுத்தப்படுகின்றன. கடலூர் மாவட்டத்திற்கு அருகிலுள்ள சேலம் மாவட்டத்தில், ஆத்தூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் மரவள்ளிக் கிழங்கினைப் பயன்படுத்தும் தொழிற்சாலைகள் அதிக எண்ணிக்கையில் உள்ளன. எனவே, பண்ருட்டி தொகுதியில் மரவள்ளிக் கிழங்கைப் பயன்படுத்தி, உணவுப் பொருட்கள் தயாரிக்கும் ஆலை அமைத்திடும் திட்டங்கள் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை*

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அதிகளவில் மரவள்ளிக் கிழங்குகள் பயிரிடப்பட்டு, உபரி ஏற்பட்டால் அதுசம்பந்தமாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடன் கலந்தாலோசித்து, துறை அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. சத்யா அவர்கள்.*

திருமதி ப. சத்யா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரவள்ளிக் கிழங்கு அதிகமாகப் பயிரிடப்படும் எங்கள் தொகுதியில் ஆலை அமைப்பது தொடர்பாக மீண்டும் பரிசீலனை செய்து, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கும் நோக்கிலே, இதை சிறப்பாகச் செய்து கொடுக்குமாறு மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் நான் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 118, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

118—

வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கட்டடம்

***27094—திரு. சிவ.வீ. மெய்யநாதன்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—